මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission

Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: **LAE/2025/101** — **2025.05.23**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025 மே 06

## 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஏற்பாடுகள்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கமைய தமது தேர்தல் பிரச்சார வருமான செலவின விபரத்திரட்டுக்களை வெவ்வேறாகத் தயாரித்து 2025.05.27 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி அல்லது அதற்கு முன்னர் அந்தந்த வேட்பாளர்கள், வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் போட்டியிட்ட உள்ளூர் அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஒப்படைக்க வேண்டும்.

அவ்வாறு தமது தேர்தல் பிரச்சார வருமான செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைக்கின்ற வேட்பாளர்களின், வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளின் செயலாளர்களின் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களின் வசதிக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட https://cf.elections.gov.lk/ இணைய இடையிணைப்பியினுள் பிரவேசித்து பதிவுசெய்து கொண்ட பின்னர் அந்த இணையதளத்திற்கு தமது தேர்தல் பிரச்சார வருமான செலவின விபரத்திரட்டுக்களை பதிவேற்றம் செய்யக்கூடிய வகையில் உரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதேபோல், இக்காலத்துள் தேர்தல் பிரச்சார வருமான செலவின விபரத்திரட்டுக்களை கொண்டுவந்து ஒப்படைக்க முடியாதிருப்பின், குறித்த விபரத்திரட்டுக்களை 2025.05.27 ஆம் திகதிக்கு முன்னர் வேட்பாளர்கள், வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் போட்டியிட்ட உள்ளூர் அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைப்பதற்கும் வாய்ப்புள்ளது.

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 8(அ) ஆம் பிரிவிற்கமைய 2025.05.27 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி அல்லது அதற்கு முன்னர் தேர்தல் செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைக்காதிருப்பதன் ஊடாக சட்டவிரோதமான செயலொன்றைப் புரிந்த தவறொன்றைப் புரிந்தவராவதுடன், அது தொடர்பாக தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கமைய சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்